மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சிவகாசி தொகுதி, வெம்பக்கோட்டை ஒன்றியம், வல்லம்பட்டி கிராமத்தில் பொதுப் பணித் துறை கண்மாயை நவீனப்படுத்தும் பணிக்கு ரூ.44 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. (ஆ) நபார்டு வங்கி கடனுதவி பெற்று இப்பணி மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 242, திரு. இரா. இராம் பிரபு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

242—

புதிய பாலம்

***42410—திரு. இரா. இராம் பிரபு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகரில், முதுகுளத்தூருக்குச் செல்லும் சாலையில் பழுதடைந்த நிலையிலுள்ள பாலத்தை புதிதாக அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 243, திரு. அ. நடராஜன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

243—

அங்காடிக் கட்டடம்

***11017—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2005 மார்ச் 30]

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மருதவாஞ்சேரி ஊராட்சியில் அங்காடிக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மருதவாஞ்சேரி ஊராட்சியில் உள்ள நியாயவிலைக் கடை முழுநேரக் கடையாக வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்கடைக்குப் புதிதாகக் கட்டடம் கட்டித் தரக் கோரி, திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலருக்கு மண்டல இணைப் பதிவாளரால் முன்மொழிவு அனுப்பப்பட்டது. நியாயவிலைக் கடைக் கட்டடம் கட்டுவதற்கு சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் வழிகாட்டு நெறிமுறைகளில் தற்போது வழிவகை இல்லையென மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் தெரிவிக்கப்பட்டு, 2004–2005 ஆம் நிதியாண்டு வரை கட்டடம் கட்டுவதற்கான நிதி ஏதும் திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்நிலையில் அரசின் இதர கிராமிய நலத் திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், இக்கடைக்குப் புதிதாகக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இல்லை என்ற சொல்லே இல்லாமல் செய்த மாண்புமிகு அம்மா அவர்களை, உலகமே வியந்து பாராட்டுகின்ற வகையில் சிறப்பான நிதிநிலை அறிக்கையைத் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எனது தொகுதியான திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், மருதவாஞ்சேரி ஊராட்சியில் மக்கள் நலன் கருதி கூட்டுறவு அங்காடிக் கட்டடம் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதனைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் இதர கிராமிய நலத் திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், இக்கடைக்குப் புதிதாகக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. நடராஜன்.

[2005 மார்ச் 30

திரு. அ. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் வாய்ப்புகள் இருந்தால் செய்து தருவேன் என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்த மாமன்றத்திலே உள்ள அனைத்து உறுப்பினர்களுடைய கோரிக்கை, பெரும்பாலானவர்களின் கோரிக்கை, அனைத்துக் கிராமங்களுக்கும் தேவையான ஒன்று. எனவே, எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள், எங்கள் தொகுதி மேம்பாட்டு நிதியை 1 கோடி ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறார்கள். அந்த நிதியின்மூலம் இதுபோன்ற அங்காடிக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நிதியமைச்சர் அவர்கள் மூலமாக அம்மா அவர்களிடம் ஆலோசனை பெற்று, வரும் நிதியாண்டில் இதுபோன்று செய்வதற்கு ஆவன செய்வாரா என்பதனைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு இவை குறித்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 244, திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

244—

அரசு பொது மருத்துவமனை

***6559—திரு. எஸ்.எம். பாலன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி அரசு பொது மருத்துவமனையை மாவட்ட அரசு பொது மருத்துவமனையாக விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 212, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 29–6–2004–ன்படி, திருச்சி மாவட்டம், மணப்பாறை அரசு மருத்துவமனை, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாகத்